**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| | | |
|---|---|---|
| R.W.– 1 கிருத்திகா<br>D/o.கலியமூர்த்தி | MCOP No.98/2023 | 27.07.2026. |

(சாட்சி ஆஜர், சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்)

**<u>1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஏற்கனவே என்னுடைய முதல் விாசரணையில் இந்த வழக்கில் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். 43, ஜீப்லி ரோடு, உடையார்பாளையம் என்ற முகவரியில் வசிக்கும் மோகன் என்பவருக்கு எங்கள் அலுவலகத்தின் பதிவேடுகள் அடிப்படையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சியிடம் 1 ஆம் எதிர்மனுதாரரின் பழகுநர் உரிமம் காட்டடப்பட்டு அவர் எங்கள் அலுவலகம் மூலமாக மேற்படி பழகுநர் உரிமத்தை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான் என்று சாட்சி ஒப்புக்கொள்கிறார். **மேற்படி பழகுநர் உரிமம் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி பழகுநர் உரிமம் 07.10.2022 முதல் 06.04.2023 வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு விபத்து 13.02.2023 ஆம் தேதி நடைபெற்றுள்ளது என்ற நிலையில் பழகுநர் உரிமம் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு இருந்துள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

சாட்சியின் கையொப்பம்: sd./– கிருத்திகா

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.07.27 18:07:30 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.